**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093670

1. District / மாவட்டம் : Tiruppur  PS / காவல்நிலையம் : V & AC  Year / ஆண்டு : 2020  FIR No. / மு.த.அ. எண் : 7/2020/AC/TPR  Date / நாள் : 13.11.2020

2. (i) Act சட்டம் : Ex. P.C  Sections பிரிவுகள் : 102
(ii) Act சட்டம் : P.C (Amendment) Act 2018  Sections பிரிவுகள் : 7
(iii) Act சட்டம் : -  Sections பிரிவுகள் :
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12.11.2020  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 17.45hrs  Time to : நேரம் வரை 21.45hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.11.2020  Time : நேரம் 11.15hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D Vol III  Time : நேரம் 11.15hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  டைப் செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 12km. தென் கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குனர்-III அலுவலகம் வீரபாண்டி பிரிவு, பல்லடம் ரோடு, திருப்பூர்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. [illegible]  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சாமிநாதன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20/5/1966  (d) Nationality : நாட்டினம் இந்திய  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
Date of Issue : வழங்கப்பட்ட நாள் -  Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
(f) Occupation : தொழில் [illegible] துணை இயக்குநர் [illegible]  (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. M. நரேந்திரா, துணை. இயக்குனர் - III, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், வீரபாண்டி பிரிவு, பல்லடம் ரோடு, திருப்பூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இந்தமனு தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டின் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 13.11.2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 13/11/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13. 11. 2020 - 13.30hrs

Name: பெயர் R. [illegible]
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
[illegible]

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 7/2020/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 13.11.2020-ம் தேதி காலை 11.15 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.எஸ்.இரத்தினம் அவர்கள் அலுவலகம் ஆஜராகி ஒரு டைப் செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அதன் விபரம் வருமாறு. அனுப்புனர் திரு.S.இரத்தினம், கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர். காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.எண்.599/2020/ஐ1 நாள்.13.11.2020 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை - தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் துணை இயக்குனர்-III அலுவலகம், திருப்பூர் - புகார் மனு வழங்குதல் - தொடர்பாக. நேற்று 12.11.2020-ம் தேதி மதியம் திருப்பூர், பல்லடம் ரோடு கணபதிபாளையம் பிரிவு, 2 வது தெரு, சபாபதி நகர், கதவு எண்.3/640-ஏ, என்கிற விலாசத்தில் செயல்பட்டுவரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் துணை இயக்குனர்-III அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் வரவிருக்கிற தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அவர்களது எல்லைக்கு உட்பட்ட தொழிற்சாலை உரிமையாளர்களிடமும் அவர்களது மேலாளர்களிடமும் தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்க சிபாரிசு செய்வதற்கும், ஆய்வு மேற்கொள்வதற்கும், அரசு விடுமுறை நாட்களில் தொழிற்சாலைகள் இயங்க தொழிற்சாலை உரிமையாளர்கள் படிவம் -V(A) சமர்பிக்கும் விண்ணப்பத்திற்கு அனுமதி அளித்தல் மற்றும் இவ்வலுவலக பணிகளுக்கு கையூட்டாக பணம் கேட்டுப்பெறுவதாக கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் நானும் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோர்கள் சகிதம் மேற்படி அலுவலகத்தை 12.11.2020-ம் தேதி மாலை சுமார் 17.45 மணி முதல் இரவு சுமார் 21.45 மணிவரை திடீர் தணிக்கை செய்தோம். இந்த திடீர் தணிக்கையின் போது துணை இயக்குனர்-III திரு.M.தர்மேந்திரா அவர்களிடமிருந்தும்

அவரது நீல நிற பேக்கிலிருந்தும் கணக்கில் வராத மொத்தப்பணம் ரூ.4,40,000/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது உதவியாளர் திருமதி.மோகனசுந்தரி அவர்களிடமிருந்து இவ்வலுவலக பதிவேடுகள் பெறப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,40,000/-, ADISA என்று அச்சடிக்கப்பட்ட நீல நிற பேக், அசல் பதிவேடுகள் ஆகியவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் XXXX S.இரத்தினம் 13.11.2020 மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு மேற்கண்டுள்ளவாறு. Sir, received the complaint with enclosures on 13.11.2020 at 11.15 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.7/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of P.C (Amendment) Act 2018 ஒப்பம் xxxx R.கௌசல்யா 13/11/2020 Inspector of Police, V&AC, Tiruppur. திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னிலை: திரு.1) S. இரத்தினம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,கோயம்புத்தூர் மாவட்டம். 2) திருமதி. R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். இன்று 12.11.2020 ஆம் தேதி மதியம் திருப்பூர், பல்லடம் ரோடு கணபதிபாளையம் பிரிவு, 2 வது தெரு, சபாபதி நகர், கதவு எண்.3/640 -ஏ என்கிற விலாசத்தில் செயல்பட்டுவரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் துணை இயக்குனர்-III அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் வரவிருக்கிற தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அவர்களது எல்லைக்கு உட்பட்ட தொழிற்சாலை உரிமையாளர்களிடமும், அவர்களது மேலாளர்களிடமும் தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்க சிபாரிசு செய்வதற்கும், ஆய்வு மேற்கொள்வதற்கும், அரசு விடுமுறை நாட்களில் தொழிற்சாலைகள் இயங்க தொழிற்சாலை உரிமையாளர்கள் படிவம் -V(A) சமர்பிக்கும் விண்ணப்பத்திற்கு அனுமதி அளித்தல் மற்றும் இவ்வலுவலக பணிகளுக்கு கையூட்டாக பணம் கேட்டுப்பெறுவதாக கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.S.இரத்தினம் ஆகிய நான், திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. R.கௌசல்யா

மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தை இன்று 12.11.2020 ஆம் தேதி சுமார் 17.45 மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின் விவரம் பின்வருமாறு:- திடீர் தணிக்கை சகிதம் திருப்பூர், பல்லடம் ரோடு கணபதிபாளையம் பிரிவு, 2 வது தெரு, சபாபதி நகர், கதவு எண்.3/640-ஏ என்கிற விலாசத்தில் முதல் மாடியில் செயல்பட்டுவரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் துணை இயக்குனர்-III அலுவலகத்திற்குள் மாலை சுமார் 17.45 மணிக்கு நுழைந்தபோது அலுவலகத்தின் முன் ஹாலில் அமர்ந்திருந்த உதவியாளர் திருமதி.P.மோகனசுந்தரி என்பவரிடம் அறிமுகம் செய்துகொண்டு அவரை விசாரிக்க அவர் தான் ஜனவரி 2018 ஆம் ஆண்டு முதல் இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக கூறினார். அவரை விசாரித்தபோது அவர் தன் இருக்கைக்கு அருகே வைத்திருந்த தனது கைபையினுள் இருந்த பணம் ரூ. 1620/- ஐ எடுத்து தானாக ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி உதவியாளருக்கு எதிரே கணினி முன்பு அமர்ந்திருந்த உதவியாளர் திருமதி.R.பிரேமா என்பவரை விசாரிக்க அவர் தானாக தனது கைபையினுள் இருந்த பணம் ரூ. 520/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி திருமதி. பிரேமா அருகே அமர்ந்திருந்த செல்வி.N.நந்தினி என்பவரை விசாரிக்க அவர் தான் கடந்த 2020 ஆகஸ்ட் மாதம் முதல் தற்காலிகமாக டைபிஸ்ட்டாக வேலை பார்த்து வருவதாகவும், தனக்கு சம்பளமாக மாதம் ரூ.8000/- துணை இயக்குனர்-III திரு.தர்மேந்திரா அவர்கள் கொடுத்து வருவதாகவும் கூறினார். மேலும் அவர் தான் வைத்திருந்த கைபையிலிருந்து பணம் ரூ.690/-ஐ தானாகவே எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மாலை சுமார் 18.15 மணி அளவில் துணை இயக்குனர்-III,

திரு.தர்மேந்திரா அவர்கள் அலுவலகதிற்குள்ளே பேக்குடன் வந்து அவரது இருக்கைக்கு சென்றார். அதன் பின்னர் பெயர் கேட்டு தெரிந்த திரு. விக்னேஷ், திரு.ரமேஷ் மற்றும் திரு.ராஜேஷ் ஆகியோர்கள் இவ்வலுவலகத்திற்குள் வந்தனர். மேற்படி விக்னேஷ் என்பவரை விசாரிக்க, தான் தாராபுரம் ACTIVECAR கம்பெனியில் HR மேனேஜராக பணிபுரிந்து வருவதாகவும், தீபாவளியன்று தொழில் நடத்த அனுமதி பெற வந்திருப்பதாகவும் கூறினார். மேற்படி நபரை விசாரிக்க அவர் தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து தானாகவே பணம் ரூ.2000/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருடன் வந்த திரு.ராஜேஷ் என்பவரை விசாரிக்க அவர் தான் மேற்படி நிறுவனத்தில் Maintenance Manager ஆக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். அவரிடம் விசாரிக்க அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று கூறினார். அவருடன் வந்திருந்த திரு. ரமேஷ் என்பவரை விசாரிக்க அவர் தான் மேற்படி நிறுவனத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வருவதாகவும், தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று கூறினார். மேற்படி இருவரும் HR Manager உடன் வந்ததாக கூறினர். இருக்கைக்கு சென்ற துணை இயக்குனர்-III திரு.M.தர்மேந்திரா அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு விசாரிக்க அவர் தான் கடந்த 09.08.2018 ஆம் தேதி முதல் இவ்வலுவலகத்தில் துணை இயக்குனர்-III ஆக பணிபுரிந்து வருவதாக கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் தனது வலது புற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5000/-மும், பின்புற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.6480/- ரூபாயும், அவரது சட்டையின் இடதுபுற மேல் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.3020/-ம் ஆக மொத்தம் ரூ.14,500/- இருந்தது. இது குறித்து கேட்க அவர் எந்த பதிலும் சொல்லவில்லை. எனவே இப்பணம் தொழிற்சாலை உரிமையாளர்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைபற்றப்பட்டது. பின்னர் அவர் கொண்டு வந்திருந்த ADISA என்று அச்சடிக்கப்பட்ட நீல நிற பேக்கின் முன்புற ஜிப்பை திறந்து பார்க்க

அதில் இருந்த காக்கி கவரினுள் பணம் ரூ.55,500/- இருந்தது. அதற்கு அடுத்த ஜிப்பை திறந்து பார்க்க கட்டுக்கட்டாக பணம் இருந்தது. அதை எண்ணி பார்க்க மொத்தம் ரூ.3,70,000/- இருந்தது. இதுகுறித்து துணை இயக்குனர்-III திரு. தர்மேந்திரா அவர்களிடம் விசாரிக்க அவர் எந்த பதிலும் சொல்லவில்லை. எனவே இப்பணமும் தொழிற்சாலை உரிமையாளர்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ADISA என்று அச்சடிக்கப்பட்ட நீல நிற பேக்கும் கைப்பற்றபட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது மொத்தம் தகுந்த முகாந்திரம் கூறாத பணம் ரூ.4,39,500/- விசாரணைக்காக கைபற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையின்போது திருப்பூர் கரைபுதூர் VR Elastics நிறுவனத்தை சேர்ந்த திரு.பொன்னுசாமி என்பவரும், திருப்பூர் TOPLIGHT Elastics நிறுவனத்தை சேர்ந்த திரு.சுப்புராஜ் என்பவரும் உள்ளே வந்தனர். அவர்களை விசாரிக்க அவர்கள் இவ்வலுவலக வேலையாக வந்ததாக சொன்னார்கள். திரு.பொன்னுசாமியை விசாரிக்க அவர் தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.10,000/- எடுத்து ஆஜர் செய்தார். அது தனது சொந்த பணம் என்று சொன்னதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.சுப்புரஜை தணிக்கை செய்ய அவர் தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.8,000/- எடுத்து ஆஜர் செய்தார். அது தனது சொந்த பணம் என்று சொன்னதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இவ்வலுவலக வருகை பதிவேட்டை பற்றி கேட்க உதவியாளர் திருமதி.மோகனசுந்தரி தன்னுடைய பராமரிப்பில் இருக்கும் தனது இருக்கையின் மேலிருந்து வருகை பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். இந்த வருகை பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இவ்வலுவலக வங்கி வரைவோலைகள் இணை இயக்குநர்-II அலுவலகத்திற்கு அனுப்படும் விபரம் குறித்த பதிவேடும் விசாரணைக்கக்காக கைபற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையானது 12.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 17.45 மணிக்கு தொடங்கி இரவு 21.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது மடிக்கணினியில் தலைமை காவலர் 1799, திரு.அசோகன் என்பவரால் தட்டச்சு செய்யபட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது அரசு அலுவலர்களையும் மற்ற நபர்களையும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டனர். இவ்வலுவலகத்தில் பெண் அலுவலர்கள் காவல் ஆய்வாளரால் தணிக்கை செய்யபட்டனர். இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை கீழ்கண்ட நபர்களால் கையெழுத்து செய்யப்பட்டது. ஒப்பம் XXXX எஸ்.இரத்தினம், துணை ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர், M.தர்மேந்திரா, துணை இயக்குனர்-III, மோகனசுந்தரி, உதவியாளர், து.இ-III அலுவலகம், தொ.ப.ம.சு, திருப்பூர், A.அசோகன், HC 1799, VAC,TPR, R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,40,000/-ஐயும், இன்று 13.11.2020-ம் தேதி 11.15 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.7/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 கீழ் இன்று 11.30 மணிமுதல் 12.30 மணி வரை வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், செயல் முறை நடவடிக்கை, ADISA என்று அச்சடிக்கப்பட்ட நீல நிற பேக் மற்றும் பணம் ரூ.4,40,000/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

R. Kousalya 13/11/2020